ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

13.08.2026

1. ஆறுமுகன் ஆளுகின்ற ஞானசபை
அகில ஞானிகள் படை அணுகி
தருமத்தை காக்கின்ற தருமசபை
துறையூர் மண்ணில் ஓங்காரக் குடிலாக

2. ஆகவே தவதரும ஞான வழிகளை
அனைவரும் ஏற்றிட அருளி வர
மகான் அரங்கன் யானும் சோதிவடிவில்
மகா அற்புதங்கள் நிகழ்த்திவர

3. வருகவே மாற்றம் உலகோர்க்கு உண்டென
வழிமொழிந்து உலகோரை வரவேற்று
தருகின்றேன் குருவார அருளாசி
தக்க பராபவ நள்ளி திங்கள் தன்னில்

4. தன்னிலே கடை குருவார ஆசியாக
தவராஜனும் வரமாக அருளுவேன்
மண்ணுலகை காத்திட வேண்டி
மக்களெல்லாம் பசி பிணி நீங்கி

5. நீங்கியே தயவே வடிவான
நிலைக்கு செயல் வடிவம் பெற
ஓங்காரன் வழிகாட்டி அருள
உலகோர் ஏற்று வந்தணுகி

6. அணுகி அருளமுது உண்டு
அபயம் அபயமென சரணாகதி
ஞானவழி வந்தேன் என உறுதி
நம்பகம் கொண்டு பணிந்து வர

7. வருகின்ற அந்த கணம் தொட்டு
வருங்காலம் மாற்றம் பெறும்
தருமம் செய்கின்ற குணமும்
தயவும் தானாகப் பெருகியே

8. பெருகியே தன்வினை வெல்லும்
பெருந்தர்மவான்கள் ஆகி

பிரணவக் குடிலின் அன்னதானத்தில்
பொருளுதவி செய்து வருவதுடன்

9. வருங்காலம் தனி கிளைகள்
வரமாக என் ஆசி படவே
தருமம் செய்கின்ற வண்ணம்
தனித்துவம் கண்டு சிறப்பர்

10. சிறப்பான தரும நெறியோடு
செபதபங்கள் ஞானிகள் பேரில்
அறத்தோடு செய்து தொடர
ஆறுமுகனோடு அனைத்து ஞானிகள்

11. ஞானிகள் ஆசியும் கூடியே
ஞாலமதில் கலியுக ஞானிகளாவர்
ஞான உலகம் படைத்து உயர்வர்
நாட்டிய அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி